REGD. No. M. 6311 2M ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 3உ புதன் (18—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 4உ வியாழன் (19—12—57) [இதழ் 160

காங்கிரஸ் மாநாட்டில் மிருகக்காட்சிசாலை

கௌஹாத்தி, டிச. 16—

இந்த ஆண்டு காங்கிரஸ் கட்சியின் மாநாடு, அசாம் மாநிலத்தில் பிரக்ஜோதிஷ்பூர் எனும் இடத்தில் நடைபெறப்போவது தெரிந்ததே! மாநாட்டிற்கான வேலைகள் துரிதமாக முடிந்து வருவதாக வெளிவரும் செய்தியுடன் கூடவே, மாநாட்டில் ஒரு மிருகக்காட்சிசாலை அமைக்கப்படுவது பற்றியும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே பந்தலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் ஒன்றினை, ஏராளமான மக்கள் கூடிப் பார்த்து வருகின்றனராம்!

பார்புகழ் பண்டிதர் பண்பிழந்து பேசுவதா?

காங்கிரசார் அன்று செய்த 'காட்டுமிராண்டி'ச் செயல்களை மறக்கவில்லை மக்கள்

பெரியாரைத் தாக்கிப் பேசிப்பெற்றுச் சென்றதென்ன?

ஜின்னாவும் தாராசிங்கும் சொன்ன சொல்லை மறந்தீரா?

சென்னை-பெரியமெட்டில் பொதுச்செயலாளர் அறைகூவல்

சென்னை-பெரியமேட்டு தி. மு. க. கிளையின் சார்பில், 14—12—57-ல் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பெரியாரை, 'பைத்தியம்'—'காட்டுமிராண்டி' என்று இழிவாகப் பேசிச்சென்ற பண்டித நேருவுக்குத் தக்க பதில் தந்தார். அதன் விவரம் இங்கு தரப்படுகிறது:—

'பண்டித நேரு, நாடோடியல்ல—நாட்டின் பிரதமர்; சந்துமுனை சிந்து பாடுபவர் அல்ல—அகில உலகப் புகழ் பெற்றவர்; 'ஆசியாவின் ஜோதி' என்று வர்ணிக்கப்படுபவர்; செல்லுமிடமெல்லாம் சிறப்பும், போகுமிடமெல்லாம் புகழ் மாலையும் பூமாலையும் பெறுபவர்; 'பெரிய அறிவாளி என்று பாராட்டப்படுபவர்; பல புத்தகங்களின் ஆசிரியர்; 'கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் தந்த மாணிக்கம்' என்று சொல்லப்படுபவர்; அவருடைய புகழ் பரவாத இடமே இல்லை; 'பஞ்சசீலத்தைப் பாருக்குத் தந்த சமாதானத் தூதர்' என்று பறைசாற்றப்படுபவர்; காடாறு மாதம் நாடாறு மாதம் வாசம் செய்த விக்கிரமாதித்தனைப்போல 'நவீன விக்கிரமாதித்தன்' என்று சொல்லும்படியாக இந்தியாவில் 6 மாதம்—வெளி நாட்டில் 6 மாதம் தங்கக்கூடியவர்; அகிலஉலகஞ் சுற்றுபவர்; பாண்டுங் மாநாட்டின் முன்னோடி; சூயஸ் கால்வாய் தகராறின் சமரச கர்த்தர்!!

"இத்தனைச் சிறப்புக்களையும் பெற்ற அந்த மாபெரும் மனிதர் தான், அண்மையிலே தென்னாட்டுக்கு வந்தார். தன்னுடைய நிலையிலிருந்து மிகமிகக் கீழே இழி தன்மையில் இறங்கிவந்திருக்கிறார். மட்டரகமாக—நாகரீகமற்ற முறையில் பெரியாரை இழிமொழிகளால் தாக்கிவிட்டுச் சென்றிருக்கிறார்.

"பெரியாரவர்களைக் கண்டிக்க வேண்டுமென்று அவர் நினைத்தால், கண்டிப்பதற்கு நாகரீகமான வார்த்தைகள் பல இருக்கின்றன. அரசியலில் ஆயிரம் கருத்துக்களைச் சொல்லலாம்; ஆனால் அரசியல் கண்ணியத்தை இழந்துவிடக்கூடாது; மாற்றுக் கட்சியின் போக்கு பிடிக்கவில்லையானால், பிடிக்காததற்கான காரணங்களை எடுத்துச் சொல்லி எதிர்க்கலாம்; மறுக்கலாம்.

"பெரியாரின் கொள்கை, நேருவின் கொள்கையிலிருந்து வேறுபாடானது — மாறுபாடானதெனலாம்; நேருவால் வெறுக்கப்படலாம் — மறுக்கப்படலாம்; இதை மக்களிடம் எடுத்துச் சொல்லுகின்றபோது, நேரு, கண்ணியமான சொற்களைக் கையாளமுடியும்; 'இன்னின்ன காரணங்களால் பெரியாரின் கொள்கை சரியில்லை' எனலாம்; 'அந்தக் கொள்கையை ஆதரிக்காதீர்கள்' எனலாம்; 'அதற்கு ஒப்பம் தாரீர்கள்' எனலாம்; 'நாட்டுக்குத் தீதானவை—மக்களால் ஏற்கப்படக்கூடாதவை' எனலாம்; 'பெரியார் பேச்சை நம்பாதீர்கள்' எனலாம்; இப்படி, எவ்வளவோ முறைகளில் பெரியார் கொள்கையை அவர் மறுக்கலாம்.

"இதைவிடுத்து, இவ்வளவு பெரிய மனிதர், இவ்வளவு கீழான நிலையிலா இறங்குவது? 'பைத்தியம்' 'காட்டுமிராண்டி' என்று கூறுவது? பண்பிழந்தா பேசுவது?

"'அரம்போல கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கள் பண்பில்லாதவர்' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். எவ்வளவு கூரிய அறிவுடையவராயினும், எத்தனைப் பெரிய ஆற்றல் படைத்த மனிதரானாலும், சிறிது பண்பிழந்துவிடுவாரேயானால் அவர் ஒரு உயிரற்ற மரத்துக்குச் சமம் என்பது தான் இந்தக் கருத்து.

"'தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக்கடை'" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்; நம் தலையில் இருக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

நகரசபை உறுப்பினர்களுக்கு ரூ. 100 ஊதியம்

பம்பாய், டிச. 17—

அடுத்த ஆண்டுமுதல் பம்பாய் நகரசபை உறுப்பினர்களுக்கு ரூ. 75-லிருந்து ரூ. 100 வரை மாத ஊதியம் தரப்படலாம் என்றும், அதற்கான சட்டமும் கொண்டு வரப்படலாம் என்றும் தெரிய வருகிறது.

அந்தச் செய்தி தவறும்!

ஷேக் அப்துல்லா அடுத்த மாதம் விடுதலை செய்யப்படுவார் என்று வெளியான செய்தி தவறு என்றும், அத்தகைய முடிவை ஜம்மு-காஷ்மீர் அரசாங்கம் செய்யவில்லை என்றும் ஒரு அறிக்கை மூலம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

விவசாயிகளுக்கு அந்தஸ்து வேண்டும்

தொழில் கௌரவிக்கப்பட வேண்டும்

தேபரின் திருவாக்கு

ராம்புரா, டிச. 16—

"விவசாயிகள் உற்பத்தியில் அக்கறை செலுத்த வேண்டுமானால், விவசாயம், மதிப்புடைய ஒரு தொழிலாக வேண்டும்; விவசாயிகளுக்கு சமுதாயத்தில் ஒரு அந்தஸ்து வேண்டும்" என்று காங்கிரஸ் தலைவர் தேபர், இங்கு, தம் கட்சிக்காரர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரசார், உணவுஉற்பத்திப் பெருக்கத்திற்குத் தங்களாலானதைச் செய்யவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டாராம்!

"விவசாய உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் போதாது; விலைகளும் ஒருநிலைப்படுத்தப்பட வேண்டும்; அப்போதுதான் உணவு உற்பத்தியாளர், தங்கள் உழைப்புக்கு ஒரு நியாயமான பலனைப் பெறமுடியும்; உணவுப் பொருள் வாங்குவோரும், தங்களது குறுகிய வருமானத்தைக் கொண்டு போதிய உணவு பெற முடியும்" என்றும் அவர் கூறினாராம்!

காங்கிரஸ் பேரவைக்குப் புதிய தலைவர் இல்லை!

புதுடில்லி, டிச. 18—

இந்தியக் காங்கிரஸ் பேரவையின் தலைவராக உள்ள திரு. தேபர், மீண்டும் காங்கிரஸ் பேரவையின் தலைவராக போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார், என்று ஒரு செய்தி கூறுகிறது.

ஆறரை லட்சம் இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை மறுக்கப்பட்டனர்

'அவர்களை ஏற்பதற்கு இல்லை' என்கிறார் பண்டிதர்

புதுடில்லி, டிச. 17—

"இலங்கையில் குடியுரிமை மறுக்கப்படும் மக்களை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா?" என்று கேட்டபோது, பண்டித நேரு, 'இல்லை; நிச்சயமாக இல்லை' என்று கூறியிருக்கிறார்!

"அவர்களை இந்தியக் குடிமக்கள் என்று சொல்வதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை; ஆனால் அவர்கள், வழக்கமான முறைப்படி, இந்தியக் குடிமக்களாக விரும்பினால், அவர்களை ஏற்க வேண்டியது நமது கடமையாகும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மாநிலங்கள் சபையில், இலங்கையில் குடியுரிமை மறுக்கப்படும் தமிழர்கள் பற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

பதிலளித்த உதவி வெளிவிவகார இலாகா மந்திரி திருமதி இலட்சுமி மேனன்; "1957 செப்டம்பர் முடிய 6,47,360 மக்களுக்கான 187,778 குடியுரிமை மனுக்கள் இலங்கை சர்க்காரில், நிராகரிக்கப்பட்டன" என்று கூறினாராம்!

அரிசி இறக்குமதிக்குப் பெரும் பணம் செலவாகிறதாம்

எனவே ஆறு மாதத்திற்கு அரிசி கேட்கக்கூடாதாம்

கோதுமையைச் சாப்பிடுமாறு தென்னவர்க்கு நேரு உபதேசம்

பிலாய், டிச. 16—

அரிசி இறக்குமதி செய்வதற்குப் பெரும் பணம் செலவாகிறதாம்! எனவே, தென்னாட்டு மக்களெல்லாம், குறைந்தது ஆறு அல்லது ஏழு மாதங்களுக்கு அரிசி கேட்கக்கூடாதாம்!

பண்டித நேரு இங்கு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினாராம்!

"ஆறு-ஏழு மாதங்களுக்கு அரிசி கேட்காமலிருந்தால், பின்னர், உணவுத் துறையில் நமக்கிருக்கும் கஷ்டங்களை நாம் சமாளித்துவிடலாம்" என்றும் அவர் கூறினாராம்!

தென்னாட்டவர்களும், வங்காளம், பீகாரில் வாழும் அரிசி உண்போரும், அதிகமாகக் கோதுமையை உண்ணவேண்டும் என்றும் பண்டிதர் உபதேசித்தாராம்!

"நாம் உணவு உற்பத்தியைக் குறுகிய காலத்திற்குள் பெருக்காவிட்டால், உணவுக்கு இதர நாடுகளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தால், இரும்புத் தொழிற்சாலைகள், இதர கனரகத் தொழில்கள் எல்லாம் வளர்ந்தும் பயன் எதும் இல்லை" என்றும் அவர் கூறினாராம்!

பாகிஸ்தான் புதிய சர்க்கார்

கராச்சி, டிச. 16—

மாலிக் பெரோஸ்கான் நூன் தலைமையில் பாகிஸ்தானின் புதிய சர்க்கார் அமைந்துள்ளது.

இவர், முன்னைய சுந்திரீகர் மந்திரி சபையில் அன்னிய நாட்டிலாகா மந்திரியாயிருந்தவர்.

இவரை பிரதமராகக் கொண்ட பாகிஸ்தானின் ஏழாவது அமைச்சரவையில், மொத்தம் பத்து மந்திரிகள் இருப்பர்.

புதிய சர்க்கார் — குடியரசுக் கட்சி, அவாமிலீக், தேசியக் காங்கிரஸ், தேசிய அவாமி கட்சி, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் கிருஷக்கிராமிக் கட்சி (ஹமீதுல் ஹக் தலைமையில்உள்ள கோஷ்டி) ஆகிய கட்சிகளுடையவும், சில சுயேச்சைகளுடையவும் ஆதரவு பெற்ற கூட்டு சர்க்காராகும்.

இவர்களுக்கு 77 பேர் கொண்ட தேசிய சட்டசபையில் 50 பேரின் ஆதரவு இருப்பதாகக் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18—12—57 புதன்

அன்று சொன்னதேபோல்!

மேட்டூர்ப் பகுதியில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிக்கப் போவதாக, தேர்தலுக்கு முன்னர், அன்றும் இன்றும் பேரரசில் நிதி அமைச்சராக இருந்துவரும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தமிழ் மக்களிடம் பறைசாற்றினர்.

புதிய அலுமினியத் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாகவும், தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மின்சாரத்தை அளிக்க சென்னை அரசாங்கம் ஒப்பியுள்ளதாகவும் அறிவிப்பதின் மூலம், அதே அமைச்சர், அலுமினியத் தொழிற்சாலை துவக்கப்படுவது நிச்சயம் என்பதைத் தமிழ் மக்களுக்கு உறுதிப்படுத்தினர்.

அதுவுமன்றி, சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைப் பகுதியில் படிந்துகிடக்கும் முதல்தரமான பாக்சைட் கனிப் பொருளை, வெவ்வேறு ஐந்து இடங்களிலிருந்துத் தனித்தனியாகத் தோண்டி எடுக்கப் போவதாகவும், அவ்வாறு தனித்தனியாகத் தோண்டி எடுக்கப்படும் அப்பொருளை, இனத்துக்கு ஐந்நூறு டன் வீதம் தனித்தனியாக அமெரிக்காவிற்கு ஆராய்ச்சி செய்ய அனுப்பப்போவதாகவும், அதே நிதி அமைச்சர் அறிவுறுத்தினர்.

இவ்வளவு விளக்கமளித்த அதே நிதி அமைச்சர், தமது பேச்சின் இறுதியிலும், மேட்டூர்ப் பகுதியில் அலுமினியத் தொழிற்சாலை துவக்கப்படுவது நிச்சயத்திலும் நிச்சயம் என்று திருவாய்மலர்ந்தருளினர்.

ஆனல்! இன்றோ!

இந்தியப் பேரரசு கைவிரிக்கிறது!

இந்த சோகச் செய்தியை, சென்னை அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் தமிழ் மக்களுக்கு துணிந்து தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வாக்களித்தது போல், மேட்டூர்ப் பகுதியில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்குவதற்குரிய பணவசதி அரசாங்கத்திடம் இல்லாததே காரணம் என்று, சென்னை அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

அரசாங்கத்திடம் போதிய பணவசதியில்லை--அதன் பலனாகத்தான், வாக்களித்தபடி மேட்டூர்ப் பகுதியில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க முடியவில்லை—என்று சென்னை அமைச்சர் கூறுகின்ற சமாதானம் பொருந்தக்கூடியதுமல்ல—அறிவுடையவர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமல்ல.

வடநாட்டில் நிர்மாணிக்க வேண்டும் என் முடிவு கட்டப்பட்டுள்ள தொழில் ஏற்பாடுகள் அனைத்தையும்—அவை சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும், அவைகளுக்குத் தேவைப்படும் மூலதனத்தை எப்படியும் தேடிப்பிடித்து, முழு அளவில் நிறைவேற்றி வைக்கத் துடித்துக்கொண்டிருக்கின்ற பேரரசு, தொழில் துறையில் — இன்றியமையா மூலப் பொருளை ஏராளமாகப் பெற்றிருந்தும் கூட—பாலைவனமாக இருந்துவரும் தமிழகத்தில், அலுமினியத் தொழில் போன்ற ஒரு தொழிலை நிர்மாணிப்பதற்கு மட்டுந்தான், தன்னிடம் பணவசதி இல்லை எனக் கூற முன்வருவதை, எந்த நேர்மையாளனும் சரி என ஒப்புக்கொள்ள முடியாது. பேரரசின் அவ்வாதத்தை நம்பவும் ஒருவன் துணியமாட்டான். நிற்க.

தமிழகத் தொழில் வளர்ச்சி பற்றி இந்தியப் பேரரசு கொண்டிருக்கும் மனப் போக்கை. அதிலும் குறிப்பாக அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கும் துறையில் அப்பேரரசிடம் படிந்திருக்கும் ஓரவஞ்சனையை, சென்ற ஆண்டிலேயே தெளிவுபட சுட்டிக் காட்டி இருக்கிறோம்.

அதை அப்படியே இதன் கீழ் தருகிறோம் :—

2—10—56 'நம் நாடு' இதழ் தலையங்கத்தில் எழுதியிருப்பதாவது :—

சேர்வராயன் மலைப்பகுதியில் கிடைக்கப்பெறும் பாக்சைட், இந்தியத் துணைக் கண்டத்தின் மற்றப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் பாக்சைட்டிலும் உயர்ந்ததாகும் என உணர்த்தப்படுகிறது. இவ்வுண்மையையும் இந்தியப் பேரரசு அறியாது எனக் கூறுவதற்கு எவருக்கும் துணிவு ஏற்படாது.

பீகாரில் மூரி என்ற இடத்தில் இயங்கிவரும் அலுமினியத் தொழிற்சாலைக்கும், மேற்கு வங்கத்துத் தொழிற்சாலைக்கும் சேர்வராயன்மலை பாக்சைட் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என்பதையும் இந்தியப் பேரரசு அறியாதிருக்க நியாயமில்லை. மேற்கு வங்கத்திற்கும், பீகாருக்கும், சேர்வராயன் பாக்சைட் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது என்பதில் மறைந்திருக்கும் உண்மையை—அதாவது சேலம் பாக்சைட் இல்லாமல் இவ்விரண்டு அலுமினியத் தொழிற்சாலைகளும் தொழில்படாது என்ற சேதியை, இந்தியப் பேரரசு தெளிவாகத் தெரிந்தே இருக்கிறது.

பீகார், மேற்கு வங்காளம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் இறக்குமதி செய்யப்பட்டது போக மீதமுள்ள தமிழகத்துப் பாக்சைட் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது, என்பதும் இந்தியப் பேரரசு அனுமதி பெறாது நடந்து வருகின்ற விவகாரம் அல்ல.

★

இந்திய ஒற்றுமை--ஒருமைப்பாடு என்பன பற்றித் தேவை இருந்தாலும் இல்லாமற்போனாலும். எப்பொழுதும் ஓயாமல் பேசிவரும் இந்தியப் பேரரசிடம், தமிழ் நாடுத் தொழில் வளர்ச்சியிலும் ஒரே வகையான அக்கறை காட்ட முன்வர வேண்டும் என்பதைத்தானே தமிழக மக்கள் எதிர்பார்ப்பர்? ஆனல் இந்தியப் பேரரசின் சொல்லிலும், செயலிலும் நாம் எதைக் காண்கிறோம்?

பீகார், வங்கம் வெளிநாடு ஆகிய இடங்களுக்கு ஏற்றிச் செல்லப்படும் சேர்வராயன் மலைப் பகுதி பாக்சைட்டைத் தடுத்து நிறுத்தினாலும் நிறுத்தாமல் போனாலும், அப்பகுதியில் ஒரு தொழிற்சாலையை நிறுவி, அலுமினியப் பண்டங்களை உற்பத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு வாழ்வளிப்பதுடன், அலுமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்துகிற மக்களுக்கும் குறைந்த விலையில் அவைகளைக் கிடைக்கச் செய்வதுதானே இந்தியப் பேரரசின் நீங்காக் கடமையாக இருக்கமுடியும்? தமிழக மக்களுக்குச் செய்யவேண்டிய அப்பெரும்பொறுப்பை, முதலாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளாகவே அல்லவா இந்தியப் பேரரசு நிறைவேற்றியிருக்க வேண்டும்?

★

சேர்வராயன் பாக்சைட்டைக் கொண்டு சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்று துவங்குவது பற்றிய ஏற்பாட்டிற்கு இரண்டாம் திட்டத்தில் இடமளிப்பதற்குப் பதிலாக, இராகுட்டில் ஆண்டு ஒன்றுக்கு 10.000 டன் உற்பத்தி செய்யக்கூடிய அலுமினியத் தொழிற்சாலை நிறுவும் ஏற்பாடு இடம் பெற்றிருக்கிறது.

★

3—10—56 'நம் நாடு' இதழ் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :—

"இராகுட்டில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையை நிர்மாணிப்பது என இரண்டாவது திட்டத்தில் ஏற்பாடு செய்துவிட்ட பிறகு, அதற்குப் பாதக மேற்படுகிற வகையில், ரஷ்ய உதவியைக்கொண்டு சேலத்தில் அதே தொழிற்சாலை ஒன்றைத் துவக்குவது கூடாது என இந்தியப் பேரரசு முடிவுகட்டிவிட்டது. இந்த முடிவும், ரஷ்ய உதவியை மறுத்ததற்கு மற்றொரு காரணமாக இருக்கக் கூடும்; இருந்தாலும், இதுவும் தென்னாட்டின் தொழில் அபிவிருத்தியைக் கெடுப்பதில் இந்தியப் பேரரசிற்குள்ள எரியுள்ளத்தை உறுதி செய்யக்கூடியதே."

தடை நீக்கம்?

புதுடில்லி, டிச. 17—
பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், கிராம ஊழியர்கள், தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவர்கள், மற்றும் ஊதியம் பெறும் ஒரு சிலர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு உள்ள தடையை நீக்க ஒரு சட்டம் மக்கள் சபையில் கொண்டுவரப்பட்டுள்ளது; இந்தச் சட்டத்தை ஆய்வுக்குழு ஆராய்ந்து முடிவுகள் அறிவிக்க அனுப்பப்பட்டுள்ளது.

அந்நியருக்குத் தரப்படும் உத்தியோகங்கள்

அபூர்வமான சந்தர்ப்பத்தில் அளிக்கப்படுகிறதாம்!

புதுடில்லி, டிச. 16—
"1957 ஜூலை 22-ந் தேதி வரையில் மொத்தம் 696 இந்தியரல்லாத அதிகாரிகள் சர்க்கார் காரியாலயங்களில் பணியாற்றியதாகத் தெரிகிறது" என்று, அமைச்சர் பி. என். தத்தார், மக்கள் சபையில் தெரிவித்தார்.

இந்தியரல்லாதாருக்குத் தரப்படும் அந்த உத்தியோகங்கள் மிகவும் அபூர்வமான சந்தர்ப்பங்களிலேயே அளிக்கப்படுகின்றன வென்றும், அதுவும்கூட குறைந்த கால அளவுக்குத்தான் என்றும் மந்திரி மேலும் கூறினர்.

பிரதேசங்களிடை நிலவும் ஏற்றத்தாழ்வு ஒழியவேண்டும்

திட்டங்களில் தென்மாநிலங்களுக்கு சலுகைகள் வேண்டும்

சி. டி. தேஷ்முக் கருத்து

சேலம், டிச. 15—
"பிரதேசங்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வு ஒழிக்கப்படவேண்டும்.
"சென்னை, ஆந்திரப் பிரதேசம், பீகார், மற்றும் கிழக்கு உ. பி. ஆகிய மாநிலங்கள் தான், இந்தியாவிலேயே மிக ஏழ்மையானவை; எனவே, இவற்றிற்கு இரண்டாம் திட்டத்திலும், எதிர்காலத் திட்டங்களிலும் விசேடமான சலுகைகள் தரவேண்டியது அவசியமாகும்"
என்று பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் சி. டி. தேஷ்முக் சேலம் நகரசபை தனக்குத் தந்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறர்.

விவசாயக் கல்லூரிகள் வளர்ச்சிக்கு உதவி

சென்னை, பஞ்சாப், மேற்கு வங்கம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலுள்ள 4 விவசாயக் கல்லூரிகளின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு நிதி உதவியளிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளன.

இந்தக் கல்லூரிகள், விவசாய மேல் படிப்பு ஆராய்ச்சிக்குரிய இடங்களாக மாற்றப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் கோவையில் உள்ள கல்லூரியும் இதற்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்யப்படும்.

உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மார்க்கம்

சி. பி. இராமசாமி யோசனை

கோவை, டிச. 17—
இந்தியாவிலுள்ள நதிகளை இணைக்க வேண்டும் என்றும், அதுவே நாட்டின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நல்ல வழியாகுமென்றும் டாக்டர் சி. பி. இராமசாமி அய்யரவர்கள், இந்திய வர்த்தகர் சங்கத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், 'உணவு நெருக்கடியைப் போக்க சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு உணவு உற்பத்தியில் அக்கறை காட்டவேண்டும் என்றார்.

பண்டிதர் பாய்ச்சல்!

"இந்தியாவில் உணவு நிலைமையை மாநிலங்கள் சமாளிக்கும் முறை எனக்குப் பிடிக்கவில்லை. நான் மாநிலசர்க்கார்களைக் குறை கூறவில்லை; தங்கள் உணவுத் தேவைகளை மத்திய அரசாங்கத்திடம்கேட்பது அவைகளுக்குவழக்கமாகி விட்டது; இப்படிச் செய்யாமல் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த மாநிலங்கள் கவனம் செலுத்தவேண்டும்" என்று நேரு அசோசியேட்டட் தொழில் வர்த்தக சபையில் தெரிவித்துள்ளார்.

பிணியாளர்களுக்குத் தரப்படும் சலுகை

புதிய விளக்கம்

புதுடில்லி, டிச. 16—
கண் பார்வையில்லாதவர்கள், எலும்புருக்கி நோயினுல் பீடிக்கப்பட்டவர்கள், புற்று நோயினுல் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் மருத்துவ விடுதிகளுக்குச் செல்லவும், மீண்டும் வீடு திரும்பவும் பதிவுபெற்ற டாக்டர்களிடம் நற்சான்று பெற்றால் தான் இரயில் மூலம் பிரயாணம்செய்யச் சலுகை தரப்படும் என்று இரயில் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கிறதாம்!

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 17—
"வேலை தேடி பெயர்ப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை, 1957 ஜனவரி மாதத்திலிருந்து அக்டோபர் இறுதிவரையில் 1 07,285 ஆகப் பெருகியிருக்கிறது" என்று, மக்கள் சபையில், தொழிலாளர் நலத் துணை அமைச்சர் அபித் அலி தெரிவித்துள்ளார்.

"இந்தக் காலங்களில் வேலை தேடித்தரும் நிறுவனங்கள் மேலும் 27 திறக்கப்பட்டது; 32,000 பேர் அதிகப்படியாகப் பெயர்ப் பதிவு செய்வதற்குக் காரணமாயிருந்தது. மிச்சமுள்ள எண்ணிக்கை எல்லா நிலையங்களிலும் அதிகமாகப் பதிவாகி வருபவர்களின் எண்ணிக்கையினுல் அதிகப்பட்டது; இந்த அதிகரிப்புப் போக்கு 1957 மார்ச் மாதத்திலிருந்து நிலவிவருகிற போக்கை அனுசரித்தே இருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

ஆலைத் தொழிலாளரின் அவல நிலை

பம்பாய், டிச. 17—
தயாரிக்கப்பட்ட துணி போதிய அளவு கைவசம் இருப்பதாலும், புதிய ஆர்டர்களை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினுலும் ஆலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்ட நிலைமை ஏற்படுகிறது என்று பம்பாய் மாநிலத்தில் நடைபெற்ற ஆலை ஊழியர் மாநாடு எடுத்துரைத்துள்ளது.

ஆந்திரத்தில் காகிதம் தயாரிக்கும் ஆலை

இந்தியப் பேரரசு நிறுவும்

புதுடில்லி, டிச. 16—
ஆந்திர மாநிலத்தில், சாகர் நகர் என்னுமிடத்தில்; பத்திரிகை காகிதம் தயாரிக்கும் ஆலை ஒன்று நிறுவ இந்தியப் பேரரசு திட்டமிட்டிருக்கிறதாம்.

இதற்காக மேற்கு ஜெர்மனி அரசாங்கத்துடனும், அங்குள்ள வேறு ஒரு நிறுவனத்துடனும் பேச்சு நடைபெற்றுவருவதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கரைக் கழிவிலிருந்து இந்தக் காகிதம் செய்யப்படுமாம்!

ஒரே ஒரு 'பிளேடு'தான்!

கல்கத்தா, டிச. 16—
"இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பிளேடுகளைக் கணக்கிட்டால், தனி ஒரு நபருக்கு ஓராண்டுக்கு ஒரு பிளேடு மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது"
என்று, திரு. வி. எச். எஸ். மைக்கேல்மோர் என்பார், அசோசியேட்டட் வர்த்தக நிறுவனத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

2-வது கப்பல் கட்டும் துறை எங்கு ஏற்படும்?

புதுடில்லி, டிச. 17—
பிரிட்டிஷ் கப்பல் கட்டும் நிபுணர்களின் அறிக்கை 1958-ல் கிடைக்கும் என்றும், அதற்குப் பிறகு இரண்டாவது கப்பல் கட்டும்துறை எங்கு ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்படும் என்றும் மத்திய போக்கு-வரத்து அமைச்சர் இராஜ்பகதூர், மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்லூரி தி. மு. கழக மாணவர் கிளை துவக்கவிழா

இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன் கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 14—

சென்னை, சட்டக் கல்லூரி தி. மு. க.-மாணவர் கிளையின் துவக்க விழா, நேற்று மாலை கோகலே மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

சேலம் சீனிவாசன் இன்னிசைக்குப் பிறகு விழா 6-30 மணிக்குத் துவங்கியது.

விழாவுக்கு தோழர் வை. சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன், மற்றும் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும், ஆந்திராவைச் சேர்ந்த தோழர் சீனிவாசனும் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினர்.

மாணவத் தோழர் பில்லப்பன் அனைவரையும் வரவேற்று, தோழர் சுந்தரமூர்த்தி அவர்களைத் தலைமையேற்று நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

தலைவர் தம் உரையில், சட்டக் கல்லூரியில் தி. மு. க. மாணவர் கிளை அமைய வேண்டிய அவசியத்தை விளக்கினார்.

அடுத்து மாணவத் தோழர் சௌந்தரராசன், மாணவர் கிளையின் பணிகளையும், தேவையையும் குறித்துப் பேசினார்.

பின்னர், ஆந்திரத் தோழர் சீனிவாசன், கழகக் கொள்கைகளை ஆங்கிலத்தில் எடுத்துரைத்தார்.

அடுத்து, தில்லை-வில்லாளன் அவர்கள் பேசுகையில், சட்டக் கல்லூரியில் மாணவர் கிளை இருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்துவிட்டு, நேரு, தமிழர்களை காட்டுமிராண்டி, பைத்தியம் என்றெல்லாம் அநாகரிகமான முறையில் பேசியதைக் கண்டித்தார். 'காட்டுமிராண்டிகள் நாமல்ல; வடநாட்டில் உள்ளவர்கள்தான்' என்பதற்கான பல ஆதாரங்களையும் காட்டினார்.

தோழர் அப்துல்சமது பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாணவர்களைத் தங்கள் பக்கம் ஈர்க்க முடியாதவர்களும், ஈர்க்கும் முயற்சியில் தோல்வி கண்டவர்களும்தான் மாணவர்கள் அரசியலில் கலக்கக்கூடாது என்று சொல்கிறார்கள்; தோல்வியின் விளைவாகவே-ஏமாற்றத்தின் எதிரொலியாகவே அப்படிப்பட்ட குரல்கள் கிளம்புகின்றன; இன்று இப்படிச் சொல்லுபவர்களெல் ஒரு காலத்தில் தங்கள் கட்சிக்கு மாணவர்களை பெருவாரியாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள்தான்."

அடுத்து, தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆங்கிலத்தில் சுமார் 3/4 மணி நேரம் அனைவரையும் கவரக்கூடிய வகையிலே பேசினார்; அவர் பேசுகையில், திராவிட மாணவர் கழகத்தின் ஆரம்பகால வரலாற்றினையும், அன்று திராவிட மாணவர் கழகத்தில் இருந்து பணியாற்றியவர்களில் பெரும்பாலோர், இன்று பல துறைகளிலும் முன்னணியில் நின்று பெரும் புகழும் பெற்று விளங்குவதையும் எடுத்துரைத்ததுடன், இந்தித் திணிப்பையும் கண்டித்தார்.

தி. மு. க.-மாணவர் கிளையின் மாநில அமைப்பாளர் தோழர் டி. கே. பொன்னுவேலு பேசுகையில், சட்டக் கல்லூரி மாணவர் கிளை அமைந்தது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும், இதுவரை, மாநிலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மாணவர் கிளைகளின் எண்ணிக்கை 98—என்பதையும் மேலும் பல கிளைகள் அமைய இருக்கின்றன என்றும் கூறி, இந்தித் திணிப்பைக் கண்டித்துக் குரலெழுப்பிய பள்ளி—கல்லூரி மாணவர்களுக்குத் தன் பாராட்டையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக, தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், மாணவர்கள் எந்த அளவுக்கு அரசியலில் கலக்கலாம் என்பதையும், குறிப்பாக சட்டக் கல்லூரி மாணவர்கள் அரசியலில் வருங்காலத்தில் நாட்டிற்கு எந்த அளவுக்குப் பயன்பட இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறினார்.

திராவிட நாடு விடுதலை பெற வேண்டிய அவசியத்தை மக்கள் மன்றத்திலே எடுத்து வைத்து வாதாடுவதில் சட்டம் படித்தவர்கள் மற்றவர்களைவிடத் திறமையாக பணியாற்ற முடியும் என்று கூறி, திராவிடம் பிரிந்தால் அது தனித்துவாழ முடியாது என்பவர்களின் கூற்றுக்குப் பல புள்ளி விவரங்களுடன் பதிலளித்து விளக்கந் தந்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழர்களைப் பண்டித நேரு அநாகரீகமான முறையில் வசைபாடிச் சென்றதை வன்மையாகக் கண்டித்ததுடன், இந்தி நமக்கு இம்மியளவும் தேவையில்லை என்பதற்கான பல ஆதாரங்களைக் காட்டினார்.

கயிறு தொழிலுக்கு அதிக நிதி உதவி

அந்நியச் செலாவணியை தேடித் தருகிறதாம்!

புதுடில்லி, டிச. 16—

கயிறு உற்பத்தி செய்யும் தொழில் அன்னியச் செலாவணியை ஊக்குவிப்பதாகும்.

இந்தத் தொழில் அபிவிருத்திக்காக ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது; ஆனால், நிலைமையை மீண்டும் ஆராய்ந்து மேலும் ரூ 70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநிலங்கள் தக்க திட்டங்களைத் தயாரித்து மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்றால், இந்த அதிகத் தொகையிலிருந்து நிதி ஒதுக்கப்படுமாம்.

ஒரே வீட்டில் 87 பேர் குடியிருப்பு!

நைரோபி, டிச. 16—

நைரோபி நகரத்தில் ஒரே வீட்டில் 8 அறைகள் உள்ளன என்றும், அந்த வீட்டில் மொத்தம் 87 இந்தியர்கள் குடியிருக்கின்றனர் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

அலுத்துவிட்டனரா?

ஊதுத் தொழிற்சாலைகள் நிறுவுவது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தின் கொள்கையில் மாறுதல் செய்யப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் உணவு மந்திரி ஜெயின் தெரிவித்துள்ளார்.

புதிய கொள்கைப்படி தனியார் துறையிலும்கூட ஊதுத் தொழிற்சாலைகளை நிறுவலாம் என்றும் அவர் கூறினார்.

சென்னை 36-வது வட்ட தி. மு. கழக பொதுக்கூட்டம்

க. அன்பழகன், சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 16—

சென்னை 36-வது வட்ட (வடக்குத் தியாகராயநகர்) தி. மு. கழகக் கிளையின் சார்பில் 8—12—57 மாலை ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., தோழர்கள் மா. செங்குட்டுவன், தி. சு. கிள்ளிவளவன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

தோழர்கள் சேலம் சீனிவாசன், மதுரை நடராசன், இராமன்-இலக்குவன் ஆகியோரின் இன்னிசைக்குப் பிறகு 6-30 மணிக்கு, மின்விளக்குகளாலும் கழகக் கொடிகளாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் கூட்டம் துவங்கியது.

கூட்டத்திற்கு, துணைச்செயலாளர் எம். ஏ. துரை தலைமை வகித்துகூட்டத்தின் நோக்கத்தை விவரித்தார்.

பின்னர் தோழர் மா. செங்குட்டுவன் கழக இலட்சியத்தை விளக்கியதுடன் வட்டார மக்களின் குறைபாடுகளைக் களைய தி. மு. கழகம் என்றும் பாடுபடும் என்று உறுதியளித்து, அனைவரும் கழகத்துக்கு ஆதரவு தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து தோழர் தி. சு. கிள்ளிவளவன் பேசுகையில், தி மு. கழகம் மக்களுக்கு ஆற்றிவரும் பணியினையும், இன்றைய அரசியல் நிலைமையையும் விளக்கினார்.

தோழியர் சத்தியவாணிமுத்து பேசுகையில், இந்தித் திணிப்பைக் கண்டித்தார். திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியத்தை விளக்கியதுடன், சட்டமன்றத்தில் தி. மு. கழகம் ஆற்றிவரும் நற்பணிகள் குறித்தும், காங்கிரஸ்காரர்கள் நடந்துகொள்ளும் விதத்தையும் அழகிய முறையில் —மக்களைக் கவரும் வகையில் எடுத்துரைத்தார்கள்.

இறுதியாக, தோழர் அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள், கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிடம் பிரிய வேண்டியதற்கான காரண-காரியங்களை எடுத்துக்கூறியும், நேருவின் அநாகரீகப் பேச்சுக்குத் தக்க வகையிலே பதிலளித்தும் சுமார் ஒரு மணி நேரம் அரிய கருத்து விருந்தளித்தார்.

இந்த வட்டாரத்தில் இதுதான் முதல் தி. மு. கழகக் கூட்டம் என்றாலும், ஏராளமான மக்கள் குழுமியிருந்து அமைதியாக அறிவுரை கேட்டுச்சென்றது குறிப்பிடத்தக்கது.

பேச்சாளர்களுக்கு, 36-வது வட்டத் தி. மு. க. கிளை, பாரதி சேவா மன்றம், கே. வி. கே.சாமி மன்றம் ஆகியவை சார்பில் கைத்தறித் துண்டுகளும், மாம்பலம் தோழர் வாதன் சார்பில் மலர் மாலையும் அணிவிக்கப்பட்டன.

அன்று காலை 9 மணிக்கு மாம்பலம் நெடுஞ்சாலையிலுள்ள மேற்படி வட்டக் கழக மனையில் ஓர் சிறப்புக்கூட்டம், செயலாளர் மா. இளங்கோ தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. சி. இராசரத்தினம் அனைவரையும் வரவேற்றுப் பேசியபின், தோழர் மா. இளங்கோ தலைமை வகித்து, கூட்டத்தின் நோக்கங்களை எடுத்துரைத்தார்.

சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் கோ. செங்குட்டுவன் கொடியேற்றிவைத்து கழகக் கொள்கைகளை விளக்கினார்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்து, அண்ணாவின் அரிய சிறப்பியல்புகளையும், அண்ணாவின் தலைமையிலே நாம் பணியாற்றுவதிலே நாட்டுக்குக் கிடைக்கவிருக்கும் நற்பலன்கள் குறித்தும் அரிய கருத்துரையாற்றினார்.

வ. ஆற்காடு மாவட்டத்தில் அண்ணா

சிறப்பான வரவேற்புக்களும் பொதுக்கூட்டங்களும்

பல்லாயிரவரிடையே கொள்கை விளக்கம்

8-12-57 காலை 9-30 மணிக்கு, வேலூர் தோட்டபாளையம் தி. மு. கழகக் கட்டிடநிதிக்காக நேஷனல் தியேட்டரில் மா. பா. சாரதி எம். எல். ஏ., எம். சி. அவர்கள் தலைமையில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது,

தலைவர், தோட்டப்பாளையம் கிளையினர் சேவையைப் பாராட்டினார்; தி. மு. கழகம் எப்படி மக்களுக்குப் பயன்படுகிறது என்பதை எடுத்துச் சொன்னார்.

அடுத்து காஞ்சி சி. வி. இராசகோபால், காங்கிரஸ்காரர்கள் நடந்துகொள்ளும்விதத்தைக் கண்டித்துப் பேசினார்.

பின்னர் மா. கி. தசரதன், 'திருக்குறள்' என்ற தலைப்பில் அந்நூல் எப்படித் தமிழர்களின் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற பணியினைச் செய்யும் என்பதை விளக்கி, தமிழர் இழந்த செல்வத்தைப் பெறும்பேற்றை, திருக்குறளைக் கற்று அதன்படி நடந்தால் பெறுவர் என்பதனை விளக்கினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"காங்கிரஸ்காரர்கள் ஒரு கிளைக் கழகக் கட்டிடம் கட்ட வேண்டுமானால் நம்மைப்போல் இப்படி சிறப்புக் கூட்டம் போட்டு பணம் திரட்டிக்கொண்டிருக்க மாட்டார்கள்; பெரிய பெரிய பணக்காரர்கள் ஓடோடியும்வந்து அவர்களுக்கு உதவி செய்துவிட்டுப் போவார்கள். ஆனால் தி. மு கழகம் அப்படிப்பட்ட உதவிகளை எதிர்பார்த்ததில்லை. ஏழை எளியவர்களின் இதயத்தில் பிறந்த நல்லெண்ணத்தைக் கொண்டுதான் இன்றுவரை வளர்ந்து வந்திருக்கிறது தி. மு. கழகம்.

"இந்தக் குறுகிய காலத்தில் நாம் பெற்றுள்ள வளர்ச்சி பெருமைக்குரியது என்பதை எண்ணும்போது நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த வளர்ச்சியைப் பெறுவதற்கு நாம் என்னென்ன பாடுபட்டோம் என்பதனையும் எண்ணிப் பார்க்கின்றபோது, நமது மகிழ்ச்சி நியாயமானது என்பதனை உணருகின்றோம்."

மேலும் அண்ணா அவர்கள் தி. மு. கழகத்தின் சட்டசபை நடவடிக்கைகளைப்பற்றி விளக்கினார்.

அண்ணா அவர்களுக்கும், மற்றும் தோழர்களுக்கும், நகர தி. மு. க., தோட்டப்பாளையம், சைதாப்பேட்டை, சத்துவாச்சாரி, அரசமரப்பேட்டை, குயப்பேட்டை, திராவிட நகர், சலவன் பேட்டை, 26-வது வட்டம், 28-வது வட்டம், கசப்பா, இராம நாயக்கன்பாளையம், கருகம்பத்தூர் ஆகிய கிளைக் கழகங்கள் சார்பிலும், கே. வி. கே. சாமி மன்றம், முத்தமிழ் மன்றம், தோழன் நூல் நிலையம், கருகம்பத்தூர் என். எஸ். கே. படிப்பகம், திருவள்ளுவர் நூல் நிலையம் ஆகியவைகளின் சார்பிலும் கைத்தறி ஆடைகள், மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன; வரவேற்பிதழ்களும் வாசித்துத் தரப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றிகூற சிறப்புக் கூட்டம் முடிந்தது. மாவட்ட செயலாளர் தோழர் முல்லைசக்தி அவர்களும் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

வியாபாரிகள் வரவேற்பு

அன்று பிற்பகல் 3-30 மணிக்கு வேலூர் பொன்நகை வியாபாரிகள் சார்பில் வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. வியாபாரிகள் சங்கத் தலைவர் திரு. ஜெயவேல் சின் தலைமைவகித்து அண்ணா அவர்களுக்கு வரவேற்புரை வாசித்தளித்தார்.

அண்ணா அவர்கள் வரவேற்புக்கு நன்றி கூறும் முறையில் தி. மு. கழகம் வியாபாரிகளுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வருவதுபற்றியும், வியாபாரிகள் நிலையான கொள்கையைக் கொண்டு தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கவேண்டியதுகுறித்தும், ஆளுங்கட்சிக்கு அடிமையாக இல்லாமல் உரிமையோடு வாழவேண்டுமென்றும், வடநாடு-தென்னாடு பிரச்சினை குறித்தும் (இச்சங்கத்தில் வடநாட்டு சேட்டுகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது) தெளிவுபட விளக்கினார்கள்.

அண்ணா அவர்களுக்கு வேலூர் காய்கறி வியாபாரிகள் சார்பில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

அரியூர் மக்கள் வரவேற்பு

அன்று மாலை 4-30 மணிக்கு அரியூர் கிராம மக்கள் அண்ணா அவர்களுக்கும், தோழர் எம். பி. சாரதி எம். எல். ஏ. அவர்களுக்கும் வரவேற்பு அளித்தார்கள்.

ஊசூர் ஊராட்சிமன்ற வரவேற்பு

மாலை 6 மணிக்கு, ஊசூர் ஊராண்மைக் கழகச் சார்பில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு அண்ணா அவர்கள் திரு. வி. க. அவர்களின் படத்தைத் திறந்துவைத்து வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், ஊராட்சிமன்றங்கள் எப்படி மக்களுக்கு நேரடியான நன்மை செய்யும் வாய்ப்பில் இருக்கிறது என்பதனை விளக்கி, அந்த வாய்ப்புள்ள ஊராட்சிமன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரவேண்டும் என்பதனை விளக்கினார்.

தோழர் வள்ளாலன் நன்றிகூற வரவேற்புக் கூட்டம் முடிந்தது. வரவேற்புக் கூட்டத்துக்கு பி. எஸ். கந்தசாமி தலைமைவகித்தார்.

பொதுக்கூட்டம்

பிறகு அதே மேடையில், தோழர் தனவேல் தலைமையில் தி. மு. க. கிளை துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; அண்ணா அவர்கள் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறித்தும், கடவுள் துறையில் நம் கழகக் கொள்கையையும் தெளிவாக விளக்கிப் பேசினார்.

வ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் முல்லைசக்தி அவர்கள், வேலூர் வட்டத்தில் பல கூட்டங்களில் கலந்துகொண்ட அண்ணா அவர்களுக்கும், மற்றும் உடன் வந்த தோழர்களுக்கும் நன்றிகூறினார். தோழர்கள் எம். பி. சாரதி, பேராசிரியர் ம. கி. தசரதன், காஞ்சி-இராசகோபால் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

அண்ணா அவர்களுக்கும், மற்ற தோழர்களுக்கும், ஊசூர், தொரப்பாடி, மருதவல்லிபாளையம், விரிஞ்சிபுரம், வேலூர், கந்தநேரி தி. மு. கழகங்களின் சார்பிலும், அகரபாளையம் மறுமலர்ச்சி மன்றம், சின்னசேக்கனூர் கிராம மக்கள் சார்பிலும், அணைக்கட்டு தி. மு. க. சார்பிலும் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

வேலூரினின்றும் ஊசூர் செல்லும் வழியில் இருந்த சிற்றூர்களிலும், குப்பங்களிலும் அண்ணா அவர்களுக்கும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம். பி. சாரதிக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அரியூர் குப்பம், சின்னசேக்கனூர் முதலிய இடங்களில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

எல்லா நிகழ்ச்சிகளிலும் மாவட்டச் செயலாளர் முல்லைசக்தி அவர்கள் உடன் இருந்து ஏற்பாடுகளைக் கவனித்து, நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற உதவி செய்த தோழர்களுக்கு ஊக்கம் அளித்தார்.

இரா. நெடுஞ்செழியன் தெளிவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரைதான் மயிருக்கு மதிப்பு; அது தலையிலிருந்து கீழே விழுந்துவிடுமேயானால், அதை தூர வீசி எறிவோமே தவிர, அதை எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சமாட்டோம்; அது நம் தலையைவிட்டுப் பிரிகிறதே என்பதற்காக வருந்தமாட்டோம்; அதைப்போலத்தான், நேருவும், தன் நிலையிலிருந்து சிறிது கீழே இறங்குவாரேயானால் — பண்பிலிருந்து குறைவாரேயானால், மக்களால் வெறுத்தொதுக்கப்படுவார்.

"திருக்குறளிலே சொல்லப்பட்ட இத்தகைய கருத்துக்களுக்கு இலக்கணமாக—எடுத்துக்காட்டாக நான் இருக்கிறேன்" என்பதைக் காட்டிக்கொள்ளும்படியாகவா பண்டிதர் பேசுவது?

"பண்டித நேரு தன்னுடைய நிலையிலிருந்து மிகமிகக் கீழே இறங்கிவந்து பெரியாரை இழித்துப் பேசினர். நேரு இறங்கிய அளவுக்கு பெரியாரும் தன்னுடைய நிலையிலிருந்து கீழே இறங்கி, 'நேரு காலிப்பயல்மாதிரி பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்; இன்னும் இரண்டு நாள் இங்கு தங்கியிருந்தால் செருப்பு மாலை கிடைத்திருக்கும்' என்ற கருத்திலே பேசிவிட்டு, பிறகு மேலே ஏறிவிட்டார். பதிலுக்குப் பதில் நேருவுக்குப் பலன்கிடைத்துவிட்டது. பெரியார் பேசிய பேச்சை வாங்கிக்கட்டிக்கொண்டு நேரு போய்விட்டார்; நேரு மரியாதை கொடுத்து மரியாதை வாங்கவில்லை.

"முன்பு ஒருமுறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நடந்த அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டுக்கு வந்த நேரு, இப்படித்தான் பேசினர்; தமிழர்களை, 'காட்டுமிராண்டிகள்' என்ருர். அப்பொழுது நம் அண்ணா அவர்கள், தஞ்சையிலே பேசியபோது, 'பண்டித நேரு மிகமிகப் பெரிய மனிதர்; நாமோ மிகமிகச் சாமான்யர்; பெரிய மனிதர் பெரும் பிழை செய்துவிட்டார்; சாமான்யர்களாகிய நாம் மன்னிப்போம் — மறப்போம்' என்று பெருந்தன்மையுடன் கூறினர்.

"அதன் பிறகு இப்பொழுது தமிழ் நாட்டுக்கு வந்தபோதும் இப்படி இழி சொற்களால் தமிழர்களைத் தாக்கியிருக்கிறார். எனவேதான், பெரியாரவர்கள், இதை மன்னிக்க முடியாது என்ற நிலையில், நேரு இறங்கிய அளவு இறங்கி, பதிலுக்குப் பதில் தந்துவிட்டு, பிறகு மேலே ஏறிவிட்டார். பண்டித நேருவுக்கு இனிமேலாவது ரோஷ உணர்ச்சி வரவேண்டாமா?

"பண்டித நேரு, சாதாரண பண்டித நேருவாகத் தமிழ் நாட்டுக்கு வரவில்லை; பிரதமர் நேருவாகத்தான் வந்தார். நம்முடைய வரிப் பணத்தைச் சம்பளமாக வாங்கிக்கொண்டு, நம்முடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்துகொண்டுதான் அவர் இங்கு வந்தார். காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்துக்குக்கூட வரவில்லை— பிரதமர் என்ற முறையில்தான் வந்தார். வந்தவர், நம்மையே இழித்தும் பழித்தும் பேசுவதென்றால், எப்படிப் பொறுக்க முடியும்? நானும் வரி கொடுக்கிறேன்— நீங்களும் வரி கொடுக்கிறீர்கள். எனவே, நேருவின் பேச்சைக் கண்டிக்க எல்லோருக்கும் உரிமையிருக்கிறது.

"நம்மைப் பார்த்து, 'காட்டுமிராண்டிகள்' என்று கூறுகிற நேருவைக் கேட்கிறேன்—யார் காட்டுமிராண்டிகள்? 1942-லே, நேருவின் கட்சிக்காரர்கள் செய்தவையெல்லாம் காட்டுமிராண்டித்தனமல்லவா? பெரியாராவது, 'சட்டப் புத்தகத்தை எரிப்பேன்' என்ருர்; காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? போலீஸ் அதிகாரிகளைக் கொலை செய்தார்கள்; போலீஸ் அதிகாரிகள்மீது அக்கினித் திராவகத்தை ஊற்றினர்கள்; அப்படி, திராவக வீச்சினல் உடம்பெல்லாம் பாதிக்கப்பட்ட தீச்சட்டி கோவிந்தன் என்னும் போலீஸ் அதிகாரி (டி. எஸ். பி.) இன்னுமிருக்கிறார்.

"தஞ்சை மாவட்டத்திலே மன்னார்குடியில் டிப்டி கலெக்டர் ஆபீஸ், முனிசிபல் ஆபீஸ், இரயில்வே நிலயம் ஆகிய மூன்று கட்டிடங்களையும் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினர்கள். அவற்றின் உள்ளே இருந்த 'ரிக்கார்டு'களையெல்லாம் சாம்பலாக்கினர்கள். அப்பொழுது நான் அங்கிருந்தேன்.

"அந்தக் கட்டிடங்களெல்லாம் வெள்ளைக்காரர்களுடையவையா? 'ரிக்கார்டு'களெல்லாம் எரிந்ததால் வெள்ளைக்காரனுக்கா நஷ்டம்? பாழாக்கப்பட்ட சொத்துக்களெல்லாம் தமிழர்களுடையவையல்லவா? இந்த இழி செயல்களிலே அவர்கள் இறங்கலாமா? இப்படி நாசமாக்கப்பட்ட சொத்துக்களுக்கு நஷ்டஈடாக ரூ. 13/4 இலட்சம்—மன்னார்குடி மக்களிடமே ஒரே வாரத்தில் தண்ட வரியாக வசூலித்தான், வெள்ளைக்காரன் அப்பொழுது; நானும் அந்தத் தண்ட வரியைச் செலுத்தியிருக்கிறேன்.

"இரயிலைக் கவிழ்த்தார்களே, அப்பொழுது, அந்த இரயிலிலே இருந்தவர்களெல்லாம் வெள்ளைக்காரர்களா?

"'இந்தக் காரியங்களெல்லாம் காங்கிரசிலே தீர்மானம் போட்டுச் செய்யப்பட்டவையல்ல' என்று நேரு சொல்லலாம்; ஆனல், பின்னல் காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், இந்தக் கொலைபாதகச் செயல் செய்தவர்களுக்கெல்லாம், 'தியாகி மானியம்' என்ற பெயரிலே — 'நஞ்சையானல் 5 ஏக்கர்; புஞ்சையானல் 10 ஏக்கர்' என்று பங்கிட்டுக் கொடுத்தார்களே, ஏன்? இப்படிக் கொடுத்ததன் மூலமே இந்தக் காரியங்களை ஒப்புக்கொண்டுவிட்டார்கள் என்றுதானே பொருள்? கொலை வழக்கிலே பிடிபட்ட காசிராஜன், இராசகோபாலன் போன்ற காங்கிரசுக்காரர்களுக்காக திரு. இராசகோபாலாச்சாரியார் உட்பட பல பெரிய மனிதர்கள் வாதாடி அவர்களை, மீட்டார்களே!

"இதெல்லாம் நாகரிகமான செயலா பண்டித நேருவே— என்று கேட்க விருமபுகிறேன்.

"நம்மைப் பார்த்து 'காட்டுமிராண்டி' என்கிறார்; ஆனல், வடநாட்டிலே நடந்ததென்ன? மராட்டியத்திலே நேருவின் படம் கொளுத்தப்பட்டது. அவர் படத்துக்கு செருப்பு மாலை போடப்பட்டது. குஜராத்திலே அவர் பேசிய கூட்டத்திலே செருப்புகள் வீசப்பட்டன. ஒரு கூட்டத்திலே அவர் பேசவே முடியாமல் திணறடித்திருக்கிறார்கள். 90 நிமிட நேரம் கெஞ்சிப் பார்த்தும் பேசமுடியாமல் மேடையைவிட்டுக் கீழே இறங்கிவந்திருக்கிறார். பஞ்சாபிலே பண்டித நேரு பேச இருந்த ஒரு கூட்டத்தில் சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாராசிங் எழுந்து, 'பண்டித நேருவே, உம்மை இங்கு பேச அனுமதிக்க மாட்டேன்; பேசாமல் போய்விடும்' என்று கர்ஜித்தார் உடனே வேறு எதவும் பேசாமல் நேரு திரும்பிவந்திருக்கிறார். அவருடைய வாழ்நாளிலேயே நடந்திராத—என்றும் மறக்க முடியாத சம்பவம் அன்று நடந்திருக்கிறது.

"இப்படிச் செய்த அவர்களையெல்லாம், 'காட்டுமிராண்டிகள்' என்று அவர் சொல்லவில்லை—சொல்ல முடியவில்லை; நம்மைப் பார்த்துத்தான் சொல்லமுடிகிறது.

"ஜனப் ஜின்னா, பாகிஸ்தான் கேட்ட நேரத்தில், அவருடன் சந்தித்துப்பேச தான் வருவதாக நேரு கூறினர்; அப்பொழுது ஜின்னா என்ன சொன்னார் தெரியுமா? நேருவைப் பார்த்து, 'நீ ஒரு சாதாரண பையன்—You are a show boy'—என்று சொன்னர்; 'நீ வரவேண்டாம்; உனக்கு ஒன்றும் தெரியாது; உன் தலைவர் காந்தியை வந்து சந்திக்கச் சொல்' என்றார் ஜின்னா!

"இப்படி இவரைப் பற்றி, யார் யாரெல்லாம் என்னென்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியும்.

"பண்டித நேரு இப்பொழுது, புகழ்ச்சியின் உச்சியில்—ஏறியிருப்பவர்; அதனல்தான், ஆணவத்துடன் பண்பு இழந்து பேசுகிறார்.

"அவர் தனது புகழ்ப் பயணத்தின் இறுதிக் கட்டத்தை அடைந்துகொண்டிருக்கிறார்! அரசியல் வாழ்க்கையின் இறுதி அத்தியாயத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்! நாமோ இப்பொழுதுதான் முதற்கட்டத்திலே அடியெடுத்துவைத்திருக்கிறோம்; எனவே, 'நாம் வளர்வோம்' என்ற நம்பிக்கை நமக்கு உண்டு; அவர்கள் நிலை என்ன ஆகும் என்றும் நமக்குத் தெரியாது.

"நேரு நன்ருக—பல்லாண்டு வாழட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. நேருவுக்குப் பிறகு நிலைமை என்ன? நேருவின் புகழிலே—அவருடைய நிழலிலேதான் தமிழ்நாட்டில் காங்கிரஸ் நிலைத்திருக்க முடிகிறது.

"நேருவுக்குப் பிறகு பந்த்ஜியோ, தாண்டன்ஜியோ, மொரார்ஜியோ, முகர்ஜியோ சொல்வதையா தமிழ்நாட்டு மக்கள் ஏற்பர்? அண்ணாவும், நமது இயக்கத்தினரும் கூறும் கருத்துக்களை மீறியா வடநாட்டினர் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பார்கள் தமிழ்நாட்டு இளைஞர்கள்? ஒருக்காலும் நடவாது. எனவே, நாம் வளர்வோம்—வாழ்வோம்! காங்கிரஸ் தேய்கிறது—அழிந்துவிடும் என்பதற்கான அறிகுறிதான் பண்டித நேரு இப்படியெல்லாம் பேசியிருப்பது என்று நீங்கள் உணர வேண்டும்."

வானவீதியில் அமெரிக்க செயற்கைக் கிரகம்

கானவீரல்முனை, டிச. 18— 'அட்லாஸ்' என்னும் செயற்கைக் கிரகத்தை அமெரிக்க விமானப்படை வானவீதியில் செலுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நீங்காத் தடை நீடிப்பு

சென்னை, டிச. 17— போலீஸ் கமிஷனரின் முன் அனுமதி பெருமல் கூட்டம் நடத்தவோ, ஊர்வலம் செல்லவோ கூடாது என விதிக்கப்பட்டுள்ள தடை சனவரி முதல் தேதிவரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தி ஆட்சி மொழிபற்றி காமராசர்

சென்னை, டிச. 17— மத்திய அரசாங்கம் இந்தியை ஆட்சி மொழியாக்குவதுபற்றி தென் மாநிலங்கள் சனவரி திங்களில் கலந்து பேசக்கூடும் என்றும், தென்மண்டலக் குழுவிலும் இதுபற்றிப் பேசப்படலாம் என்றும் நிருபர்களிடம், முதலமைச்சர் காமராசர் கூறியுள்ளார்.

குளித்தலையில் சிறப்புக் கூட்டம்

இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்வார்.

21-12-57 காலை 9-மணிக்கு, குளித்தலை முருகன் திரையரங்கில் தோழர் டி. வி. முத்துக்கிருட்டினன் தலைமையில், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக ஓர் சிறப்புக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் 'நேற்று—இன்று—நாளை' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

அறிவிப்பு

"பல நண்பர்கள் நான் எழுதிய நூல்கள் வேண்டுமென்று கேட்டு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை திருச்சி திராவிடப் பண்ணைக்குத் தந்துவிட்டேன். ஆகையால் என் நூல்கள் வேண்டுவோர் திராவிடப் பண்ணை, திருச்சி-2. என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்"

எனத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

போளியம்மனூர்

கே. வி. கே. சாமி திடலில் 20—12—57 மாலை 6-மணிக்கு

பேசுவோர்:

சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
பி. என். ஸ்ரீராமாநுசம்

ஆமதாபாத்

மாவட்ட செயற்குழு உறுப்பினர்கட்கு:

ஆமதாபாத் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நரோடா தி. மு. க. இல்லத்தில் 22—12–57 மாலை 3 மணிக்கு நடைபெறும்; அதுபோது, எதிர்கால நடவடிக்கை பற்றி ஆராயப்படும். ஒவ்வொரு மாவட்ட உறுப்பினர்களும் தவறாது வருகை தரும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அய்யம்பாளையம் தி.மு.க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

19—12—57 மாலை 5-30 மணி அளவில் அண்ணா மன்றத்தில், கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, சில முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கீரனூர் தி. மு. க. பொது உறுப்பினர்களுக்கு:

20—12—57 இரவு 8 மணிக்கு மேற்படி உறுப்பினர்கள் கூட்டம் எப். யு. சி.-யில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

19—12—57 இரவு 7-மணிக்கு சென்னை 47-வது வட்ட தி. மு. க. கிளை சார்பில் தியாகராயநகர் ஏரிக்கரை திரு. வி. க. மன்றத்தில் தோழர் ஆ. சா. நடராசன் தலைமையில் "தி. மு. கழகமும் தாழ்த்தப்பட்டோரும்" என்ற தலைப்பின்கீழ் பலர் பேசுவர்.

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்

இரண்டாவது சம்பளக் குழு சிபாரிசு

தங்களின் ஏமாற்றம் பற்றி மாநில சர்க்கார் ஊழியர்கள் பண்டிதருக்கு அறிவுறுத்தல்

புதுடில்லி, டிச. 17—

இரண்டாவது சம்பளக் கமிஷன், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கிராக்கிப்படி உயர்வு தருவதுபற்றி இடைக்கால உத்தரவு ஒன்று பிறப்பித்துள்ளது.

ரூ. 250-க்கு அதிகப்படாமல் மாதச் சம்பளம் பெறும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ரூ. 5 கிராக்கிப்படி உயர்வு தரவேண்டுமென குழு சிபாரிசு செய்திருக்கிறது. 1957 சூலை முதல் இது தரப்பட வேண்டுமென்றும் குழுவினர் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று தரப்பட்ட இந்த சிபாரிசினை, சர்க்கார் ஏற்றுக் கொண்டிருப்பதாக மக்கள் சபையில் நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

ஜூலையிலிருந்து தரவேண்டியுள்ள இந்தக் கிராக்கிப்படி உயர்வை, தேசியத் திட்ட சர்டிபிகேட்டுகளாகத் தருவது தேசத்திற்கும் நல்லது ஊழியர்களுக்கும் நல்லது என்ற காரணத்தினல், அவ்வாறு தரலாம் என குழு சிபாரிசு செய்திருப்பதாகவும் மந்திரி கூறினர்.

தமிழ்நாடு என்.ஜி.ஓ-க்கள் நிலைமை

சென்னை, டிச. 16— இரண்டாவது சம்பளக் கமிஷனின் விசாரணை வரம்பிற்குள் மாநில சர்க்கார் ஊழியர்களின் நிலைமையையும் கோரிக்கையையும் கொண்டு வரவேண்டும் என்ற சென்னை என். ஜி. ஓ-க்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்கும் விஷயத்தில் மத்திய சர்க்கார் காட்டும் தாமதம் தங்களுக்குப் பெரிதும் ஏமாற்றம் தந்திருப்பதாக, சங்கத்தவர், பண்டித நேருவுக்கும், உள்நாட்டு அமைச்சருக்கும் தந்தி அனுப்பியுள்ளனர் என்று தெரிகிறது.

சங்கத்தவர், மாநில முதன் மந்திரி, நிதிமந்திரி ஆகியோரைப் பேட்டி காணவும் முயற்சிக்கின்றனர்.

சங்கத்தின் மத்திய செயற்குழு டிச. 22-ந் தேதி கூடவிருக்கிறது என்றும், அப்போது, ஊழியர்களின் இன்றைய நிலை பற்றி விவாதிக்கப்படும் என்றும் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.